**றுவன்வெல்ல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 09 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 யூலை 16 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 28 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான றுவன்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2013, 2014 ஆம் ஆண்டுகளில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு ரூபா 218,840 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமை கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) நீதிமன்றத் தண்டப் பணமாக 2014 ஆம் ஆண்டின் பொருட்டு ரூபா 7,323,038 பெறப்பட்டு அது மீளாய்வாண்டிற்கான வருவாயாகக் கணக்கிலிடப்பட்டமையால் அதேயளவு தொகையால் மிகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், திரண்ட நிதியம் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுமிருந்தது.

(இ) 2013, 2014 ஆம் ஆண்டுகளின் பொருட்டுப் பெறப்பட்ட முத்திரைக் கட்டணமாகிய ரூபா 12,049,808 மீளாய்வாண்டினது வருவாயாகக் கணக்கிலிடப்பட்டமையால் அதேயளவு தொகையால் மிகை அதிகரிக்கப்பட்டும் திரண்ட நிதியம் குறைத்தும் காட்டப்பட்டுமிருந்தது.

(ஈ) 2015 யூன் 15 ஆந் திகதியன்று பொது நிர்வாக அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 178,710 பெறுமதியான தூமாயன இயந்திரம் இயந்திர சாதனங்களின் கீழ் கணக்கிலிடப்படாமையால் இயந்திர சாதனங்களது பெறுமதி அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டினது முதல் 3 மாதங்களுக்கான உறுதிச் சான்றுகளின் பிரகாரம் கடன் கொடுத்தோர் தொகை ரூபா 121,202 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2013 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகவுள்ள ரூபா 87,789 கடை வாடகையைப் பதிவழிப்பதற்கு 2015 சனவரி 19 ஆந் திகதி சபை அங்கீகரித்தபோதும், அதற்கமைய நடவடிக்கை எடுக்காததால் கடை வாடகை நிலுவையானது அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) கழிவுகளை ஏற்றிச் செல்லும் 06 வண்டிகள் ரூபா 265,440 செலவிடப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்டு மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கின் கீழ் கணக்கிலிடப்படாமையால் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கு அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2015 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 177,510 பெறுமதியான தளபாடங்களும் பொருத்திகளும் கணக்கிலிடப்படாமையால் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் கணக்கு அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டினது காணி மற்றும் கட்டிடங்களாக கணக்கில் காட்டப்பட்ட தொகை ரூபா 27,005,095 ஆகும். எனினும், அதற்கான பட்டோலை கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம், 15 ஏக்கர், 12 பர்ச்சஸ் உடைய 08 காணித் துண்டுகளது பெறுமதி மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருக்காததுடன், மேலும் 50 காணித் துண்டுகளது பெறுமதி கணக்கில் காட்டப்படாதுமிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிசார் கூற்றுக்களின் பிகாரம் மீளாய்வாண்டினது முடிவில் உள்ளவாறான 06 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 28,195,173 ஆகவிருந்ததுடன், அவற்றோடு தொடர்புடைய உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் ஆண்டு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 22,243,290 ஆகியமையால் ஏற்பட்ட வித்தியாசம் ரூபா 5,951,883 ஆகும்.

### 1.3.3 தொங்கற் கணக்கு

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 18,981 கூட்டுத் தொகையுடைய தொங்கற் கணக்கு வரவு மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 27,888,932 ஆகும். ஓராண்டிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 4,072,164 ஆகும்.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 19,927,145 ஆகும். ஓராண்டிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 9,938,463 ஆகம்.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி 387 | மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 நடைமுறைக் கணக்குகளில் மேலதிகப் பற்று வசதி பெறப்பட்டிருந்தது. |
| (ii) நி.பி 396(ஈ) | ஆறு மாத காலங் கடந்த ரூபா 40,097 பெறுமதியான 15 காசோலைகள் தொடர்பாகக் குறித்த பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| (i) ii ஆம் அத்தியாயத்தினது 13.7 ஆம் பிரிவு மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் சீஎல்/97/2015 ஆம் இலக்க 2015 செப்டம்பர் 30 ஆந் திகதிய சுற்றறிக்கை | ஏதாவதொரு பதவிக்குரிய கடமையை ஈடேற்றுவதற்கென நியமிக்கப்படுமிடத்து அதன் பொருட்டு மேலதிக ஊழியத்திற்கு உரித்தில்லாதபோதும், சபையின் பதில் செயலாளருக்கு மாதாந்தப் படியாக ரூபா 10,000 மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) XXI அத்தியாயத்தின் 1.1 ஆம் உப பிரிவு மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 05/2013 | கடமையில் ஈடுபட்டிருக்கையில் எச் சேவையில் ஈடுபட்டுள்ளார் என்பதை இலகுவாக இனங்காண்பதற்கு இயலுமானவாறு சீருடைகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் அவ்வுடைகளை அணியாதிருப்பது 2015 நவெம்பர் 19 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டதுடன், 2015 ஆம் ஆண்டில் ரூபா 203,545 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) சபரகமுவ மாகாண நிதிசார் விதிக்கோவை | |
| நிதிசார் விதி 261.2.2 | 2015 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 305,385 முற்பணமானது 2016 ஏப்ரல் 22 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,928,231 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 2,567,191 ஆகியமையால் மீளாய்வாண்டினது நிதிசார் பெறுபேறுகளில் ரூபா 4,361,040 அதிகரிப்பு தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிப் பெறுபேறுகளின் ரூபா 4,361,040 அதிகரிப்புக்கு 04 வருவாய் விடய அதிகரிப்பும் 05 செலவின விடயக் குறைவும் காரணமாக அமைந்தன.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருவாயினது தோற்றுவாய் | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை | 2015.01.31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| தீர்வையும் வரியும் | 2,417 | 533 | 1,966 | 1,063 | 1,884 | 903 | 2,787 |
| குத்தகை வாடகை | 2,664 | 611 | 6,501 | 5,087 | 2,053 | 1,414 | 3,467 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 80 | 01 | 166 | 166 | 79 | - | 79 |
| பிற வருவாய் | - | - | 2,077 | - | - | - | |

மேற்படி வருவாய் நிலுவை அறிக்கையை நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பிடுகையில் பின்வருமாறான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| வருவாயினது தோற்றுவாய் | இறுதிக் கணக்குகளின் படியான மீதி | வருவாய் நிலுவை அறிக்கையின் பிரகாரமான மீதி |
|---|---|---|
| | ரூபா. '000 | ரூபா. '000 |
| தீர்வையும் வரியும் | 3,236 | 2,787 |
| குத்தகை வாடகை | 6,352 | 3,467 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 364 | 79 |

### 2.3.2 தீர்வையும் வரியும்

தீர்வை வரியைச் செலுத்துவதைப் புறக்கணித்தவாறு 04 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள சொத்துக்களது உரித்தாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 269,039 தீர்வை வரியை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வியாபார வரி

சபையின் பிரதேசத்துக்குட்பட்ட இடங்களில் சேவைகளை வழங்கியவாறு இருக்கும் நிறுவனங்களிடமிருந்து வியாபார வரியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.4 ஏனைய வருவாய்

(அ) 2015 சனவரி 01 இல் உள்ளவாறு 10 வகை வருவாய்களில் நிலவிய ரூபா 5,161,293 நிலுவை மீதிகளில் 2015 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு ரூபா 932,240 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. நிலுவையாக உள்ள மீதிகளை அறவிடுவதானது ஆகக் குறைந்த மட்டமான 18 சதவீதமாக இருந்தது.

(ஆ) சபையின் எல்லைக்குள் வாகனத் தரிப்பிடங்களுக்கான இடங்களை நிச்சயமாக இனங்கண்டு உப விதிகளை உருவாக்காமையால் பெறக்கூடியதாகவிருந்த வருவாய் இழப்பிற்குள்ளானது.

(இ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் மற்றும் பெனர்களுக்கான கட்டணம் அறவிடப்படாததுடன், பெரியளவிலான விளம்பரப் பலகைகளுக்கான கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) சபையின் 08 பதவிகளில் 18 உத்தியோகத்தர்கள் குறைவாகவும் 04 பதவிகளில் 19 நபர்கள் கூடுதலாகவும் இருந்தனர். 04 தொழிலாளர்கள் பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையிலும் அதிகமானோர் இருக்கையில் 21 பேர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். சபையில் பணத்தைப் பொறுப்பேற்றல், வங்கியிலிடல் என்பன சிற்றூழியர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் செயலாளர் பதவிக்குப் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமாயினும், வேலையை ஈடேற்றக்கூடிய தகுதி வாய்ந்த சில சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இருக்கையில் கனிஷ்ட பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) சபையின் பொதுச் சந்தை வளாகத்தில் 17 கடைகளைக் கொண்ட அடித்தளத்தை உள்ளடக்கிய இரு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிக்கக் கூடிய வரம்பைக் கருத்திற்கொள்ளாது நிர்மாண வேலைக்கு தலைவர் அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

(ஆ) நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கையில் விற்பனைக் கூடங்களை இழந்த நபர்களுக்கு புதிதாக நிர்மாணிக்கப்படும் கடைகளை வழங்குவதென 2013 ஏப்ரலில் பொதுச்சபை திர்மானித்திருந்தது. எனினும், பழைய கடை வாடகைப் பதிவேட்டில் பெயர்களைக் கொண்டிராத 06 நபர்களிடமிருந்து "ஆரம்பப் பணம்" பெறப்பட்டிருந்தது. கீழ் மாடியுடன் கூடிய இரு மாடிக் கட்டிடம் மாத்திரம் பூர்த்தியாகி இருந்தபோதும், 2013 யூன் 14 ஆந் திகதி முதல் நிர்மாண வேலைகளுக்கு நீதிமன்றம் தடைவிதித்திருந்தது.

(இ) பெம்சிசிகம உதாகல கிராமத்தின் காணி மற்றும் சனசமூக நிலையம் என்பன 1987 பெப்ரவரி 03 ஆந் திகதியன்று வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், சட்டபூர்வ உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. பழைய சனசமூகக் கட்டிடம் மற்றும் ஞாபகார்த்தப் பலகை என்பனவும் அகற்றப்பட்டிருந்ததுடன், மாகாண சபையின் நிதியைப் பயன்படுத்திப் புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுமிருந்தது. இக் காணியில் பெருமளவிலான மண்ணைத் தோண்டியெடுத்து அருகே உள்ள காணிக்கு இக்காணியினூடாகப் பாதை அமைக்கப்பட்டிருந்தது. எனினும், அதனை விசாரித்தறிந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) பழைய JBC இயந்திரத்திற்கு 2015 சனவரி முதல் யூலை 07 வரை பயன்படுத்திய எரிபொருள் 3,047.8 லீட்டராகும். இதற்கேற்ப, 507.96 மீட்டர் மணித்தியாலங்கள் அது வேலை செய்திருந்தபோதும், 44.4 மீட்டர் மணித்தியாலங்களுக்கு ரூபா 87,000 வருவாயை மாத்திரமே ஈட்டியிருந்தது. அதற்கமைய, 463.56 மீட்டர் மணித்தியாலங்களுக்கான ரூபா 908,327 வருவாய் இழப்பிற்குள்ளாகி இருந்தது. புதிய JBC இயந்திரத்திற்கு 189,227 லீட்டர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. அதன் மூலம் 252.16 மீட்டர் மணித்தியாலங்கள் அதனை வேலையில் ஈடுபடுத்த இயலும். எனினும், 50.8 மீட்டர் மணித்தியாலங்களுக்கு ரூபா 102,075 மாத்திரமே வருவாயாகப் பெறப்பட்டிருந்தது. 201.3 மீட்டர் மணித்தியால வருவாயை சபை இழந்திருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டின்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு, தலைமை அமைச்சு, சுற்றாடல் அதிகாரசபை, மாகாண சபை என்பவற்றிலிருந்து பெறப்பட்ட நிதியேற்பாடானது பொது வைப்புக் கணக்கினூடாக செலவிடப்பட்டு ரூபா 2,429,781 எஞ்சியிருந்தது.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மாகாண சபை நிதியாகிய ரூபா 1,020,000 மற்றும் சபையின் நிதியாகிய ரூபா 500,000 என்பவற்றைச் செலவழித்து முறையே 2015 யூலை 22 மற்றும் 2015 மே 15 ஆந் திகதிகளில் 600 ஹியூம் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டபோதும், 2015 நவெம்பர் 19 ஆந் திகதி வரை அதில் 505 எஞ்சியிருந்தன. இந்த ஹியூம் குழாய்களின் கொள்வனவும் விநியோகமும் கையிருப்புப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 திண்மக் கமிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) கொரிய சுற்றாடல் நிறுவனத்தின் மூலம் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே அவற்றைப் பிரித்தெடுத்துச் சேகரிக்கும் செயற்திட்டத்திற்கு முற்பணமாக ரூபா 1,417,917 சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் இரண்டாம் கட்டம் 2014 மே மாதமளவில் பூர்த்தி செய்யப்பட்டு 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் குறித்த விலைப் பட்டியலை உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 1,013,566 செலவினத்திற்கான விலைப் பட்டியல் 2015 நவெம்பர் 19 ஆந் திகதியளவிலும் மீளளிப்பிற்காக அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தை அமுலாக்குகையில் அரசாங்க பொருட் கொள்வனவு நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டுமாயினும், ரூபா 33,470 பெறுமதியான பொருட் கொள்வனவானது நடைமுறைகளிலிருந்து விலகியவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டத்திற்கு 2014 யூலை 30 ஆந் திகதியன்று ரூபா 166,250 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மஞ்சள் நிற, பச்சை நிறத்திலான 500 பைகளில் 240 பைகள் மற்றும் 2014 டிசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 144,450 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 270 பிளாஸ்டிக் கொள்கலன்களில் 168 கொள்கலன்கள் 2015 நவெம்பர் 19 ஆந் திகதியளவிலும் விநியோகிக்கப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சொத்து முகாமைத்துவம்

**பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 36,381,805 செலவழிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட றுவன்வெல்ல வாரச் சந்தை 2015 சனவரி 15 ஆந் திகதியன்று சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், 2015 நவெம்பர் 19 ஆந் திகதி வரை அது பயன்படுத்தப்படாதிருந்தது.

### 4.2 பதில் பெறப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2016 மே 16 ஆந் திகதியளவில் 06 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்கப்படாதிருந்தன. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 9,179,956 ஆகும்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்